[12th November 1957

9-20 a.m. SRI T. S. RAMASWAMI PILLAI: பிள்ளையார் உடைப்பு போன்ற காரியங்கள் எப்படி மக்களுடைய மனதைப் புண்படுத்தும் என்று கருதுகிறோமோ, அப்படியே ஆலயங்களுக்குள் ஹரிஜனங்கள் போகக் கூடாது என்று சொன்னால் அவர்களுடைய மனம் புண்படாதா ? ஆகவே தனிப்பட்டவர்களுடைய கோயில்களிலும் இனி ஹரிஜனங்கள் போகலாம் என்பதற்கு ஏற்றவகையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மனம் புண் படுவதைத் தடுக்க அரசாங்கம் அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் ஒருவர் மனம் புண்படுகிறது என்ற காரணத்திற்காக தகாத காரியங்களில் அரசாங்கம் ஈடுபடாது. தகாத சட்டங்களையும் அர சாங்கம் கொண்டு வராது.

SRI P. G. MANICKAM: சென்னை சர்க்கார் இயற்றி இருக்கும் படியான இந்த ஆலயப் பிரவேச சட்டத்தை உலகமே பாராட்டு கிறது. இந்தச் சமயத்தில் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக எந்த எந்த ஆலயங்களில் எல்லாம் இன்னமும் ஆலயப்பிரவேசம் நடைபெற வில்லை என்பதைக் கணக்கெடுத்து அவற்றை நடத்துவதற்கு அரசாங்கத் தார் ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்க முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்து மத பரி பாலன இலாகாவுக்கு உட்பட்ட கோயில்களில் எல்லாம் இம்மாதிரி ஹரி ஜனங்கள் உள்ளே நுழையக்கூடாது என்கிற தடை இருப்பதாக நான் உணரவில்லை. ஏதாவது ஒரு கோயிலில் இருக்கிறது என்கிற புகாரை குறிப்பாக கனம் அங்கத்தினர் சொன்னால் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

SRI T. P. ELUMALAI: கனம் சபாநாயகர் அவர்களே, தனிப் பட்டவர்களின் கோயில்களிலும் ஹரிஜனங்களை அனுமதிப்பதற்கு சர்க்கார் சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிட்டியைப்போட்டு முக்கியஸ் தர்களோடு கலந்து பேசி உடன்பாடு காண ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த யோசனை யின் பேரில் நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

Settlement of tenancy disputes.

* 148 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have taken steps to settle the dispute between the landlords and the 'Mattuvaramdars' and 'Kaivaramdars' of Tiruchirappalli district during August 1957; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) Yes Sir. There were tenancy disputes in Nangavaram and its hamlets. After prolonged discussions between the landlords and the local officers, the disputes were settled in Nangavaram; the londowner agreeing to give a portion of the lands on lease and the kisans agreeing to cultivate a portion of the lands on waram basis. There are however still disputes in Manachanallur, Sreedevimangalam, Thimmachipuram, Kumaramangalam and Amoor villages.

Local officials are taking every effort to bring about an amicable settlement.

12th November 1957]

Sri N. K. PALANISAMI : சில இடங்களில் ஒப்பந்தம் ஏற் பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஒப்பந்தங்களின் முக்கியமான ஷரத்துகள் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதாவது இந்த நங்கவரம் ஊரைப் பொறுத்த வரையில் 79½ ஏக்கரா குத்தகைக்கு விடுவது, இன்னும் 51 ஏக்கரா மாட்டுவாரம் என்ற அடிப்படையில் கொடுப்பது, இன்னும் 69 ஏக்கரா பண்ணை சாகுபடிக்கு வைத்துக்கொள்வது என்கிறது ஒரு உடன்பாடு. இதை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்ற கிராமங்களில்தான் இன்னும் தகராறு இருக்கிறது. கனம் அங்கத் தினர் எந்தக் கட்சியில் இருக்கிறாரோ அந்தக் கட்சியின் தொந்தரவுதான். மற்ற கட்சியின் தொந்தரவு போய்விட்டது.

Sri C. MUTHAIYA PILLAI : திருச்சி ஜில்லாவில் செய் திருப்பதைப்போல தொந்தரவு, புரட்சி எல்லாம் தஞ்சை ஜில்லாவில் ஏற்படுவதற்கு முன் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அங்கேதான் புரட்சி இல்லையே. புரட்சி என்று என் கூறுகிறார் ?

Sri A. V. P. ASAITHAMBI : நங்கவரத்தில் ஏற்பட்ட தகராறை சமாதானமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் தீர்த்து வைத்தது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அது தெரியாது. ஆனால் சர்க்காருக்குத் தெரிந்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான் அங்கே கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தது.

Sri S. LAZAR : நிலச்சுவாந்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும் ஏற்பட்ட தகராறை சட்டபூர்வமாகத் தீர்த்துக்கொள்ள இடம் இருந்தும்கூட ஒரு சில தனிப்பட்ட நபர்களோ, சங்கங்களோதான் அவர்கள் நேரிடை நடவடிக்கையில் இறங்குவதற்குக் காரணமாக இருந்தார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அவர்கள்பேரில் நடவடிக்கை எடுத் திருக்கிறார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நான் இதற்கு முன் சொன்ன பதில்களில் இருந்தே சில பேர்கள்தான் கிளர்ச்சிக்குக் காரணம் என்பது தெரியும். இப்போது எல்லாம் சமாதானமாகப் போய்விட்ட தால் இதை அதிகம் கிளறவேண்டாம் என சர்க்கார் நினைக்கிறது.

Sri N. K. PALANISAMI : சில இடங்களில் ஒப்பந்தம் ஏற் பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தகராறு எழக்கூடிய பிரச்னை என்ன என்பதை சர்க்காரே உணர்ந்திருக்கிறது. ஆகவே ஹைக்கோர்ட் தீர்ப்பு வெளியான பிறகு கிராமங்களில் குத்தகை உரிமைகளையும் கட்டுப்படுத்தும் சட்டம் கொண்டுவரகூடுமா என்று கேட்கிறேன் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : பொதுவாக கல்டி வேடிங் டெனன்ட் சட்டம் என்று எந்தமுறையில் எல்லாக் குறைபாடுகளையும் நீக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டுவரலாம் என பரிசீலனை செய்து கொண்டுதான் இருக்கிறது சர்க்கார்.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த நங்கவரம் விவசாயிகளுடைய குறைகளைப் பற்றி ஒரு கிளர்ச்சி ஏற்பட்ட நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுதுள்ள சட்டத்தில் சில குறை பாடுகள் இருக்கின்றன, அவற்றைத் திருத்துவதற்கு விரைவில் நட வடிக்கை எடுக்கப்படும் என்பதாகச் சொன்னது, இந்தத் துறையிலுள்ள அமைச்சருக்குத் தெரியுமா ? தெரிந்தால் அவர் சொன்னது போன்ற குறைகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் இன்னும் காலதாமதம் ஆவது என் ?

[12th November 1957

THE HON. SRI M. A. MANICKAVELU: நானும் அதைத்தான் முன்பே சொன்னேன். (Loopholes) அந்தச் சட்டத்தில் சில ஓட்டை உடசல்கள் இருக்கின்றன. அவைகளை நிவர்த்திக்க சர்க்கார் ஆலோசனை செய்துதான் வருகிறது.

SRI K. B. S. MANI: தஞ்சை ஜில்லாவில் விவசாயிகளுடைய நலனுக்காக ஒரு கோவாப்பரேடிவ் சொஸைடியை ஏற்படுத்தச் சட்டம் இயற்றி இருந்தாலும், அதன்மூலம் நிலங்கள் இன்னமும் விநியோகிக்கப் பட்டு பயிர்ச்செலவு நடப்பதற்கு வசதி இல்லாமல் இருக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கேள்வி திருச்சியைப் பற்றியது. தஞ்சாவூரைப் பற்றிக் கேட்கிறார். அதுவும் கோவாப்பரேடிவ் சொசைடியைப் பற்றிக் கேட்கிறார். என்னிடம் பதில் இல்லை.

SRI M. P. SUBRAMANIAM: கை ஏறு வாரம், மாட்டு ஏறு வாரம் இவற்றுக்கு 60, 40 என்பது இல்லை, 40, 60 என்பதும்கூட இல்லை. மிகக் குறைவாக 20 சத விகிதம் தான் கிடைக்கிறது. 60, 40 என்கிற அடிப்படையில் அவர்களுக்கும் அனுகூலம் ஏற்பட சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கையேறு, மாட்டு யேறு வாரம் என்பது ஒரு தனி இது. அதிலே மிராசுதார் அதிக உரம் கொடுக்கிறார். இன்னும் என்னவோ உதவி செய்கிறார். இதைப்பற்றி யெல்லாம் திருத்த மசோதா வரும்போது—அவரும் ஒரு திருத்த மசோதா கொடுத்திருக்கிறார்—விவாதித்துக்கொள்ளலாம். எல்லாம் அப்போது பரிசீலிக்கப்படும்.

Deepening of irrigation wells.

* 149 *Q.*—SRI M. S. SELVARAJAN (on behalf of Sri A. R. Subbiah Mudaliar): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total number of applications received till 1957 under loan-*cum*-subsidy scheme for deepening irrigation wells from the agriculturists of Tenkasi and Sankarankoil taluks of Tirunelveli district; and

(*b*) the number of applications disposed of ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) The number of applications received up to 15th September 1957 under subsidy-*cum*-loan scheme is as follows :—

Tenkasi taluk—1,791.
Sankarankoil taluk—1,625.

(*b*) The number of applications disposed of is as follows :—

Tenkasi taluk—367.
Sankarankoil taluk—825.

SRI M. S. SELVARAJAN: ஜில்லா கலெக்டர்களுக்கு அதிகமாக வேலை இருப்பதால் இம்மாதிரி கடன் வழங்குவதில் அதிக காலதாமதம் ஆகிறது. அப்படிக் காலதாமதம் ஆகாமல் கோடை காலத்துக்குள்ளேயே விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப் படுவதற்கு சர்க்கார் ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமனம் செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மாதிரி அதிகப்படி கடன் கொடுக்க ஏற்பாடு செய்யும்போது ஸ்பெஷல் ஆபீசர் போட்டுத்தான் வழங்கப்படுகிறது.